இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 03.07.2026

# தறிகெட்டு அராஜகம் செய்யும் த.வெ.க.வினர் - 1

தமிழ்நாட்டில் ஆட்சி என்ற ஒன்று இருக்கிறதா, சட்டம் இருக்கிறதா, போலீஸ் இருக்கிறதா, காவல் நிலையங்கள் இருக்கிறதா என்று கேட்கக் கூடிய அளவுக்கு அராஜகங்கள் அரங்கேறி வருகின்றன. **ஆளும் கட்சியாக வந்து விட்டோம், த.வெ.க.வினர் எத்தகைய அராஜகமும் செய்யலாம் என்று அக்கட்சியினர் நினைத்துக் கொண்டு விட்டார்கள். குற்றங்கள் அதிகமாகி விட்டன என்பதை விட, த.வெ.க.வினர் செய்யும் குற்றங்கள்தான் அதிகமாகி விட்டன** என்றே சொல்ல வேண்டும்.

**‘கில்லி’ சரத் என்று முன்பு அழைக்கப்பட்டவர், மாண்புமிகு சரத்குமாராக இப்போது இருக்கிறார். அவர் இழுப்பதற்கு முன் ‘பவுடர்’ தயாரித்த வீடியோக்கள் வெளியான பிறகும் அவர் மீது நடவடிக்கை எடுக்க முதலமைச்சர் விஜய் தயாராக இல்லை. தனது ரசிகை ஒருவரை ஸ்ரீவைகுண்டம் எம்.எல்.ஏ. சரவணன் தூண்டுதலின் பேரில் இரண்டு த.வெ.க. நிர்வாகிகள் பாலியல் வன்கொடுமை செய்தது ஆதாரப்பூர்வமாக அம்பலமான பிறகும் அந்த சட்டமன்ற உறுப்பினர் மீது நடவடிக்கை எடுக்க முதலமைச்சர் விஜய் தயாராக இல்லை. இதுதான் சட்டம் ஒழுங்கை அவர் காக்கும் லட்சணம் ஆகும். அதனால்தான் த.வெ.க. நிர்வாகிகளின் ‘க்ரைம் ரேட்’ அதிகமாகி வருகிறது.**

1. தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் அருகே த.வெ.க.வைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு வேலை வாங்கித் தருவதாகக் கூறி, குளிர்பானத்தில் மயக்க மருந்து கொடுத்துக் கூட்டு பாலியல் வன்கொடுமை செய்த விவகாரத்தில் த.வெ.க. தூத்துக்குடி மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பாலமுருகன், ராமநாதபுரம் மாவட்ட த.வெ.க. நிர்வாகி ஜெயபால் ஆகியோர் கைது செய்யப்பட்டு உள்ளார்கள். ஸ்ரீவைகுண்டம் எம்.எல்.ஏ. சரவணனுக்கு இதில் சம்பந்தம் இருப்பதாக அந்தப் பெண் சொல்கிறார். அமைச்சரவையில் இருக்கும் இரண்டு அமைச்சர்களிடம் புகார் சொல்லியும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்கிறார் அந்தப் பெண். தனக்கு தொடர்ந்து கொலை மிரட்டல் வருகிறது என்றும் சொல்கிறார் அந்தப் பெண்.
2. சென்னை காசிமேட்டில் 11 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை அளித்த ஆர்.கே. நகர் 43-ஆவது வார்டு த.வெ.க. பகுதி பொறுப்பாளர் ‘பாம்பு’ தினேஷ் ‘போக்சோ’ சட்டத்தில் கைது செய்யப்பட்டு உள்ளார்.
3. தாம்பரம் அடுத்த மணிமங்கலத்தில் கல்லூரி மாணவி குளிப்பதை ஜன்னல் வழியே எட்டிப்பார்த்த த.வெ.க. நிர்வாகி தியாகு (32) கைது செய்யப்பட்டுள்ளார்.
4. மதுரை கீழமாத்தூர் பகுதியில் பெயிண்டர் வேலை பார்த்து வரும் த.வெ.க. நிர்வாகி கண்ணன் 10-ஆம் வகுப்பு மாணவியின் வீட்டுக்கு நள்ளிரவில் சென்று பாலியல் தொல்லை கொடுத்தபோது கையும் களவுமாக சிக்கினார். கைது செய்யப்பட்ட அவர் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டு சிறையில் அடைக்கப் பட்டார்.
5. முதலீட்டாளர்களிடம் அதிக லாபம் தருவதாகக் கூறி சுமார் 25 கோடி ரூபாய் வரை பண மோசடி செய்ததாகப் புதுக்கோட்டை மத்திய மாவட்ட த.வெ.க. செயற்குழு உறுப்பினர் சரவணன் கைதானார்.
6. கும்பகோணம் நாலுரோடு பகுதியில் சாலையில் விதிமுறைகளை மீறிவைக்கப்பட்டத.வெ.க. பேனரை அகற்றக்கூறிய போக்குவரத்து காவலரைத்தாக்கி, அவரது கையை முறித்தத.வெ.க. தொண்டர்கள் அருண், காளி ஆகியோர் சிறையில் அடைக்கப்பட்டனர்.
7. ஒட்டன்சத்திரம் அருகே உள்ள பாலப்பன்பட்டி கிராமத்தைச் சேர்ந்த இளங்கோவன், த.வெ.க. கிளைச் செயலாளர். இவரால் பாதிக்கப்பட்ட மக்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேரடியாக புகார் அளித்துள்ளனர். த.வெ.க. நிர்வாகி மீது காவல்துறை நடவடிக்கை எடுக்கவில்லை என்று மனுவில் அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.
8. நாமக்கல் தினசரி காய்கறி மார்க்கெட்டில் எம்.எல்.ஏ. திலீப் ஆய்வு செய்தபோது, உடன் சென்ற த.வெ.க. மாவட்டச் செயலாளர் சதீஸ், அங்கிருந்த மாநகராட்சி வருவாய் ஆய்வாளரை ஒருமையில் பேசியதுடன், ‘டிரான்ஸ்பர் செய்து விடுவேன்’ என மிரட்டும் காட்சி சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.
9. பெருங்களத்தூரில், ஆப்ரேட்டர் துரை என்பவர், கட்டிட இடிப்பு பணியில் ஈடுபட்டிருந்தார். த.வெ.க. கொடி அணிந்த வாகனத்தில் வந்த த.வெ.க. வட்டச்செயலாளர் ஜெய், ஒரு லட்சம் ரூபாய் கேட்டு அடாவடி செய்தார். தனது ஆதரவாளரிடம், ‘கத்தியை எடு’ என கூறிய த.வெ.க. நிர்வாகி ஜெய், ‘பொக்லைன்’ ஆப்பரேட்டரை சரமாரியாகத் தாக்கி இருக்கிறார்.
10. செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தை அடுத்த கீழாமூர் கிராமத்தில் வசித்து வந்த முத்தம்மாளிடம் நகையை பறித்து கொலை செய்ததாக த.வெ.க. கிளை நிர்வாகி வாசுதேவனை போலீசார் கைது செய்தனர்.
11. வேலூர் மாவட்டம், கணியம்பாடியைச் சேர்ந்த த.வெ.க. ஒன்றிய செயலாளர் விஜயகுமார் தங்கள் பகுதியில் உள்ள செங்கல் சூளைக்குச் சென்று ஒரு லட்சம் மாமூல் கேட்டு மிரட்டினார். இதனைக் கண்டித்து அப்பகுதி மக்கள் கணியம்பாடி காவல்நிலையத்தில் புகார் அளித்தனர். புகார் அளித்தவர்கள் மீதே வேலூர் கிராமிய காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்தனர். இதனால் ஆத்திரமடைந்த மக்கள் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் சாலை மறியலில் ஈடுபட்டனர். அதன்பிறகு தான் அவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. வேறு வழியில்லாமல் கட்சியில் இருந்தும் அவர் நீக்கப்பட்டுள்ளார்.
12. சென்னை அரும்பாக்கத்தில் மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தை த.வெ.க.வைச் சேர்ந்த குணசேகரன் என்பவர் பல வருடங்களாக ஆக்கிரமித்து உணவகம் நடத்தி வந்திருக்கிறார். அதை அகற்றச் சொன்ன மாநகராட்சி அதிகாரிகளையும், கட்டுமான நிறுவன ஊழியரையும் தாக்கி இருக்கிறார் குணசேகரன். அவர் மீது அமைந்தகரை காவல்நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

— **தொடரும்**



திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, அமெரிக்கத் துணைத் தூதர் மரியானா எல். நெய்ஷ்லர் அவர்கள் நேற்று (02.07.2026) அவரது இல்லத்தில் மரியாதை நிமித்தமாகச் சந்தித்துப் பேசினார். அதுபோது கழகத் தலைவர் அவர்கள், “The Dravidian Model” புத்தகத்தை வழங்கினார். உடன் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. உள்ளார்.

### 108-ஐ 120–ஆக மாற்ற குதிரைபேர அரசியல் நடத்தும் த.வெ.க.!

# ஒன்றிய அரசு விசாரணை நடத்த வேண்டும்!

## முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி வலியுறுத்தல்!

**புதுக்கோட்டை, ஜூலை 3-**

**108-ஐ 120 ஆக மாற்ற குதிரை பேரம் நடத்தும் த.வெ.க. குறித்து ஒன்றிய அரசு விசாரணை நடத்த வேண்டும்” என்று முன்னாள் சட்டத் துறை அமைச்சர் எஸ். ரகுபதி அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.**

இது குறித்து முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி அவர்களின் பேட்டி வருமாறு–

முதல்வர் விஜய் கரூர் செல்வதற்கு முன்பாக முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜியை கைது செய்ய வேண்டும் என்ற திட்டத்தோடு பொய் வழக்கு போட்டுள்ளனர்.



**குதிரை பேரத்துக்கு எதிரானது தி.மு.க.!**

குதிரைபேரத்திற்கு எடுத்துக் காட்டு த.வெ.க. 108 என்பதை 120 ஆக்க வேண்டும் என்பது தான் அவர்கள் இலக்கு அதற்காக குதிரை பேர அரசியலிலே ஈடுபட்டு வருகிறார்கள்.

“வாஷிங் பவுடர் நிர்மா”ன்னு ஒரு பாட்டு வரும். அதுபோல ஊழல் கறை உள்ளவங்களுக்கு எல்லாம் வாஷிங் பவுடர் விஜய்.

குதிரைபேர அரசியலில் ஈடுபட்டு ஆட்சிக்கு வர வேண்டும் என்றால் 2017லேயே நாங்கள் ஆட்சிக்கு வந்திருக்க முடியும். ஆனால் அதை எங்கள் தலைவர் விரும்பவில்லை. மக்களை சந்தித்து தான் ஆட்சிக்கு வந்தோம். எனவே குதிரை பேரத்திற்கு எதிரானது தான் தி.மு.க.

**வைகோவின் ஒப்புதல் வாக்குமூலம்!**

அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க் கள் பலரும் த.வெ.க.விற்கு தாவி வருகின்றனர். குதிரைபேரத்திற்கு எடுத்துக் காட்டே த.வெ.க. தான். ம.தி.மு.க.வின் பொதுக்குழுக் கூட்டத்தில் இரண்டு எம்.எல்.ஏ. களையும் ராஜினாமா செய்ய சொல்லுங்கள் நானே அவர்களை வெற்றி பெற வைக்கிறேன் என முதல்வர் விஜய் உறுதியளித்தாக வைகோவே ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார். த.வெ.க. தரப்பில் இருந்து குதிரை பேரம் , யானை பேரம் என எல்லாம் நடந்துள்ளது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. ஆனால் அந்த குதிரை பேரத்தின் மீது தமிழ்நாடு காவல்துறை, லஞ்ச ஒழிப்பு துறை எந்த ஒரு வழக்கும் பதியவில்லை.

ஆனால் யாரோ ஒரு சட்டமன்ற உறுப்பினர் திடீரென்று ஒரு புகார் கொடுக்கிறார் அதன் மீது முழு விசாரணை மேற்கொள்ளாமலேயே நடவடிக்கை தொடங்குகிறது. அந்த புகார் அளித்த எம்.எல்.ஏ.வின் பின்புலம் என்ன தெரியுமா.? அவர் ஊத்தங்கரை தொகுதியில் சீட் வாங்கவே முறைகேடு செய்ததாக அந்த கட்சியினரே குற்றம் சாட்டுகின்றனர். அதுதான் அவரது தகுதி.

இப்போது அவர் சொல்கிறாராம், திருநாவுக்கரசு என்பவர் அவரை தொடர்பு. ‘உங்களோட தனியா பேசணும் வாங்கன்னு கூறினாராம் இவர் எதற்கு என கேட்டாராம். சபாநாயகர் மேல நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டு வர போறோம். அதற்கு ஆதரவா வாக்களிக்கணும் என்று திருநாவுக்கரசு சொன்னாராம். இப்படி ஒரு கதையை புனைந்து புகாராக கொடுத்துள்ளார். அதன் பேரில் திருநாவுக்கரசை கைது செய்து அவரிடம் இருந்து வாக்குமூலம் பெற்றதாக கூறி இன்றைக்கு முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு நெருக்கமான கார்த்தி உள்ளிட்டவர்கள் மீது அவர்கள் ஏவி விட்ட அம்பு பாய்ந்து கொண்டுள்ளது.

**செந்தில் பாலாஜியை கைது செய்ய துடிக்கிறார்கள்!**

இப்படி அவசரவசரமாக ஒரு புகாரை பெற்று அவர்களுக்கு விருப்பப்பட்ட வாக்குமூலத்தை பெற்று தற்போது நடவடிக்கை எடுத்து வருகிறார்கள் என்றால் அதற்கு காரணம் முதல்வர் விஜய் கரூருக்கு போவதற்கு முன்னால் செந்தில் பாலாஜியை கைது செய்துவிட்டு செல்ல வேண்டும் என்கின்ற நோக்கமாக இருக்கலாம் என்றுதான் இன்றைக்கு நினைக்கத் தோன்றுகிறது.

எனவே குதிரை பேரம் இங்கே நடந்ததற்கு எந்த ஆதராமும், அடையாளமுமே கிடையாது காவல்துறை அங்கே வழக்கு பதிவு செய்ததே முதலில் தவறு. அதுவும் ஒரு புகார் அடிப்படையிலே விசாரணை கூட செய்யாமல் அவர்கள் வழக்கு பதிவு செய்திருக்கிறார்கள்.

குதிரைபேரத்தின் மீது தான் த.வெ.க. அரசே நிற்கிறது. த.வெ.க. ஆட்சிக்கு வந்தவுடன் அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் நான்கு பேர் ராஜினாமா பண்றாங்க. அடுத்த நிமிஷம் சட்ட மன்றத்திலேயே த.வெ.க.வில் இணைகிறார்கள். எனவே அவர்கள் நோக்கம் எல்லாம் 108 என்பதை 120 ஆக்க வேண்டும் என்பது தான். அந்த இலக்கோடு அவர்கள் குதிரைபேர அரசியலிலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்பது இன்றைக்கு வெளிப்படையாக தெரியும். எனவே ஒன்றிய அரசு இதற்கு உரிய விசாரணையை நடத்த வேண்டும்.

**வாஷிங் பவுடர் எல்லாம் விஜய்!**

முன்பு எல்லாம் வாஷிங் பவுடர் நிர்மான்னு ஒரு பாட்டு வரும். அதுல அந்த பவுடர போட்ட உடனே கறை போயிடும்னு சொல்லுவாங்க. அது போல ஒரு ஊழல்கறை உள்ளவங்களுக்கு எல்லாம் வாஷிங் பவுடர் விஜய். இப்போது தவெக வில் இணைந்துள்ள விஜயபாஸ்கர் மேல நாலு கேஸ் நிலுவையில இருக்கு, அந்த எம்.ஆர் விஜய பாஸ்கருக்கு மூணு கேஸ் நிலுவையில இருக்கு. வேலுமணி போன்றவர்கள் அடுத்தடுத்து போக இருப்பதா சொல்றாங்க அவங்க மேலயும் கேஸ் நிலுவையில் இருக்கிறது.

இதை எல்லாம் வெறும் பவுடர் போட்டு துவைக்க முடியாது. அதனால மெஷின்ல போட்டுதான் துவைக்கணும். அந்த மெஷினுக்கு பேரும் விஜய்ன்னு தான் வச்சிருக்காங்க. விஜய் வாஷிங் மெஷினில் வாஷிங் பவுடர் விஜயை போட்டு துவைத்தால், யார் யார் மீதெல்லாம் ஊழல் குற்ற வழக்குகள் இருக்கிறதோ அவர்கள் எல்லாம் புனிதர்களாக, தூய சக்திகளாக மாறி விடுவார்கள் சொல்ல முடியாது அவங்களுக்கு கோயில் கட்டி கூட கும்பிட்டாலும் கும்பிட்டுருவாங்க எனவே அப்படிப்பட்ட நிலைமை தான் இன்றைக்கு தமிழ்நாட்டிலே இருக்கிறது.

நாங்கள் பொறுப்பான எதிர்கட்சியாக இருக்கிறோம் எங்களுடைய தலைவர் குதிரைபேர அரசியலில் செய்ய வேண்டும் என்று நினைத்திருந்தால் 2017-லேயே செய்திருக்க முடியும். அன்றைக்கு எங்களிடத்திலே 109 எம்.எல்.ஏ.க்கள் இருந்தார்கள். ஆனால் குதிரை பேரம் கூடாது நான் கொள்ளைப்புறம் வழியாக வர விரும்பவில்லை. மக்களை சந்தித்துத்தான் நான் ஆட்சிக்கு வருவேன் என்று சொன்ன தலைவர் எங்களுடைய தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள். எனவே கொள்ளைப்புற அரசியல், குதிரை பேரம் என்பது எல்லாம் எங்களுக்கு பிடிக்காது. குதிரைபேர அரசியலில் ஈடுபட்டு ஆட்சிக்கு வர வேண்டும் என்று நினைத்திருந்தால் அன்றைக்கே வந்திருக்க முடியும். எனவே குதிரை பேரத்துக்கு எதிரானது தான் திராவிட முன்னேற்ற கழகம் ஜனநாயகத்தை தான் நாங்கள் நம்புகிறோமே தவிர பணநாயகத்தை நம்பவில்லை.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டியில் கூறியுள்ளார்.

### ஊழல் வழக்குகளில் சிக்கியவர்கள் த.வெ.க.வில் சேர்ப்பு!

# தொட்டவர்களை விட மாட்டேன் என்பது இதுதானா?

## முதல்வருக்கு அறப்போர் இயக்கம் கேள்வி!

*சென்னை, ஜூலை 3 -*

*ஊழல் வழக்குகளில் தொடர்புடையவர்களை தவெகவில் சேர்த்து கொள்வதுதான், முதல்வர் விஜய் கூறிய, தொட்டவர்களை விட மாட்டேன் என்பதா என அறப்போர் இயக்கம் கேள்வி எழுப்பியுள்ளது.*

*இது குறித்து அறப்போர் இயக்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது :-*

*C.விஜயபாஸ்கர் சுகாதாரத்துறை அமைச்சராக இருந்த பொழுது மாதா மாதம் MDM குட்காவிடம் 14 லட்சம் ரூபாய் party fund வாங்கி, சி.பி.ஐ. குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளது. தமிழ்நாடு லஞ்ச ஒழிப்புத்துறை ரூபாய் 35 கோடி அளவில் இவர் மீது வருமானத்துக்கு அதிகமான சொத்து குவித்துள்ளார் என்று குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், இவருடைய நிலத்தில் அனுமதிக்கப்பட்ட அளவைவிட பல மடங்கு கனிம வளம் கொள்ளை செய்துள்ளார் என்று வருமான வரித்துறை கண்டுபிடித்துள்ளதாக அறப்போர் இயக்கம் குறிப்பிட்டுள்ளது.*

*சேகர் ரெட்டியின் SRS மைனிங் நிறுவனத்திடம் இருந்து மட்டும் விஜயபாஸ்கர் 85 கோடி பணம் பெற்றார் என்று வருமான வரித்துறை உயர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளதாகவும், ஆர்.கே. நகர் இடைத்தேர்தலில் பணப்பட்டுவாடா சம்பந்தமான ஆவணங்கள் இவர் சம்பந்தமான இடத்தில் தான் பிடிபட்டது.*

*கோடிக்கணக்கான ரூபாய் கொடுக்கப்பட்டுள்ளது என்று அந்த தேர்தலில் ரத்து செய்யப்பட்ட அறிக்கைகளில் கூட இவர் தான் அதில் முக்கிய காரணியாக குறிப்பிடப்பட்டுள்ளார். தொட்டவர்களை விட மாட்டேன் என்பது இது தானா? என்று முதல்வர் விஜய்க்கு அறப்போர் இயக்கம் கேள்வி எழுப்பியுள்ளது.*

### ஆர்.அருள் (எ) அருண்குமார் ஏற்பாட்டில் செம்பாக்கம் வடக்கு பகுதி தொண்டர் அணி சார்பில்

# 500 நபர்களுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் முகம் பொறித்த வெள்ளி நாணயம் - நலஉதவிகள்!

## மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன் - இ.கருணாநிதி வழங்கல்! ஏ.கே.கருணாகரன் தலைமை!

*காஞ்சிபுரம், ஜூலை. 3 -*

*காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், செம்பாக்கம் வடக்கு பகுதி தொண்டர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாள் தொடர் அன்னதானம் 30 வது நாள் நிறைவு விழா மற்றும் 500 நபர்களுக்கு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் முகம் பொறித்த வெள்ளி நாணயம் & நலத்திட்ட உதவிகள் வழங்குதல் இன்று (03.07.2026 வெள்ளிக்கிழமை) மாலை 6 மணிக்கு, பாரதிபுரம், குரோம்பேட்டையில் நடைபெறுகிறது.*

*இந்நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தா.மோ. அன்பரசன் மற்றும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக துணைச் செயலாளர் இ.கருணாநிதி ஆகியோர் கலந்து கொண்டு 500 நபர்களுக்கு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் முகம் பொறித்த வெள்ளி நாணயம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்குகின்றனர்.*

*இந்நிகழ்ச்சிக்கு செம்பாக்கம் வடக்கு பகுதிக் கழகச் செயலாளர் ஏ.கே. கருணாகரன் தலைமை வகிக்கிறார்.*

*25 வது வட்டக் கழகச் செயலாளர் எம்.சார்லஸ், செம்பாக்கம் வடக்கு பகுதி தொண்டர் அணி அமைப்பாளர் எம்.ஜெயபால் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.*

*இந்நிகழ்ச்சியில் என். எஸ்.மதனகோபால், சி. சின்னதுரை, ஜே.கார்த்திகேயன், ஆர்.அசோக் ஜோஷி, யோகி நேரு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*செம்பாக்கம் வடக்கு பகுதி தொண்டர் அணி துணை அமைப்பாளர் ஆர். அருள் (எ) அருண்குமார் நிகழ்ச்சி ஏற்பாடுகளை செய்கிறார்.*

*எனவே மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.*

*நிகழ்ச்சி தாம்பரம் மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் வழக்கறிஞர் ஜெ.இன்சமாம், செம்பாக்கம் வடக்கு இளைஞர் அணி துணை அமைப்பாளர் கே.பிரபு, செம்பாக்கம் வடக்கு பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் இ.பி.குமரன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.*